දුරකථන / தொலைபேசி / Telephones: 011-2136600, 011-2136650
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2136602
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2876169, 011-2876181
විද්‍යුත් තැපැල / மின் - அஞ்சல் / E - mail: info@psc.gov.lk
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**

මගේ අංකය / எனது இல. / My No.: PSC/EST/05-03/02/2022
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2022.10. 13

---

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 03/2022

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
அனைத்து திணைக்களத் தலைவர்கள்,

<u>ஒழுக்காற்றுக் கட்டளையொன்றை நடைமுறைப்படுத்துகையில் அக்கட்டளை விதிக்கப்பட்ட திகதிக்கும் குற்றம் புரியப்பட்ட திகதிக்கும் இடைப்பட்ட ஒரு திகதியில் வழங்கப்பட்டுள்ள பதவி உயர்வு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய முறை குறித்த அறிவுறுத்தல்கள்</u>

எவரேனுமொரு அலுவலருக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டதன் பின்னர், குறித்த பதவியுயர்வுத் திகதிக்கு முன்னர் புரியப்பட்ட குற்றமொன்று கண்டறியப்பட்டதன் காரணமாக அது தொடர்பில் வழங்கப்பட்ட குற்றப்பத்திரத்தின் அடிப்படையில் அவ் அலுவலருக்கு ஒழுக்காற்றுத் தண்டனையொன்று விதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், குற்றம் புரியப்பட்ட திகதிக்குப் பின்னர் அவ் அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ள மேற்குறித்த பதவியுயர்வு தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் குறித்து சிக்கல்கள் தோன்றியுள்ளதாக இவ் ஆணைக்குழுவிடம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

02. எனவே, குற்றம் புரியப்பட்ட திகதிக்கும் ஒழுக்காற்றுக் கட்டளை விதிக்கப்பட்ட திகதிக்கும் இடைப்பட்ட ஒரு திகதியில் பதவி உயர்வினைப் பெற்றுக்கொண்ட அலுவலர், குறித்த குற்றத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள ஒழுக்காற்றுத் தண்டனை காரணமாக ஏற்புடைய பதவி உயர்விற்குத் தகைமையற்றவராக இருப்பின், அவ் ஒழுக்காற்றுத் தண்டனையை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஏற்புடைய பதவி உயர்வு தொடர்பில் செயற்பட வேண்டிய முறை குறித்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

03. எனினும், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள பதவி உயர்வானது ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொதுச் செயலாற்றுகைக்கு அமைய தடையின்றி ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு மேற்கொள்ளப்படும் பதவி உயர்வு எனின், குறித்த ஒழுக்காற்றுத் தண்டனை நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் ஏற்புடைய சேவைப் பிரமாணக் குறிப்பில் அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலுவலர் தகைமை பெறும் திகதியை மீளவும் தீர்மானித்து குறித்த திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அலுவலரின் பதவியுயர்வினைத் திருத்தியமைப்பதற்கு நியமிப்புச் செய்யும் அதிகாரியினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அதன் பொருட்டு இவ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைக் கோருவது அவசியமற்றது.

04. இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களைப் பொறுத்த வரையில் பதவி உயர்வு என்பதன் மூலம் கருதப்படுவது, புதிய பதவிக்கான நியமனம் அல்லது குறிப்பிட்ட பதவியொன்றிற்கு, தரத்திற்கு அல்லது தர நிலைக்கு எந்தவொரு முறையிலேனும் மேற்கொள்ளப்படும் பதவி உயர்வாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம். ஏ. பீ. தயா செனரத்
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு